வாசிக்க: லூக்கா 1:68-75

***"சிலுவையின் செய்தி நம்மை மீட்டெடுக்கும் இறைவன்மையாய் இருக்கிறது"***
***(1 கொரி 1:18)***

நற்செய்தியின் வல்லமையே நமது கிறிஸ்தவ வாழ்வைத் துவக்கி வைக்கிறது. "சுவிசேஷமானது விசுவாசிக்கிற ஒவ்வொருவருக்கும் கடவுளின் மீட்பளிக்கும் வல்லமையாய் இருக்கிறது" என்று அன்றைய உலகின் அரசியல் தலைநகராம் ரோம் மாநகர மக்களுக்கு வெட்கப்படாமல் பவுல் அறிவித்தார் (ரோ 1:16). மார்க்க பக்தியுள்ள யூதனோ, அறிவு பெருத்த கிரேக்கனோ, கல்லாத பழங்குடியினனோ எவருக்கும் எவ்வித வேறுபாடுமின்றி அவ்வல்லமை செயல்படும் (வச 14). எவ்வளவு புனிதமான மார்க்கச் சடங்காயினும், எவ்வளவு தத்துவரீதியான விவாதமாயினும், எவ்வளவு பழமையான பாரம்பரியமாயினும் அது மனிதரை இரட்சிக்காது. மக்களை நித்திய மீட்புக்குள் கொண்டுவர கடவுள் பயன்படுத்தும் ஒரே வல்லமை இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷமே.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இறப்பு மற்றும் உயிர்ப்பின் சரிதையானது வெறும் சரித்திரச் சம்பவமல்ல. அது வல்லமை நிறைந்த அருட்செய்தி. மிகக் கொடிய பாவியையும் நொடிப்பொழுதில் மாற்றிவிடும் அது! சுவிசேஷம் என்பது வெறும் அறிவிப்பல்ல; அது ஒரு நபர். அதுதான் கிறிஸ்துவானவர். இரட்சிப்புக்குக் "கிறிஸ்து கடவுளின் வல்லமையாய் இருக்கிறார்" (1 கொரி 1:24). சிலுவையின் செய்தி நம்மை மீட்டெடுக்கும் இறைவன்மையாய் இருக்கிறது (1 கொரி 1:18).

சுவிசேஷத்தைத் திருத்தூதுவர் பேதுரு "அழியா வித்து" என்றழைக்கிறார். அதற்குள் உயிரும் வலிமையும் நிறைந்துள்ளது. நமது புதுப்பிறப்பிற்குக் காரண மான வித்து இதுவே (1 பேது 1:23). உன்னதமானவரின் வல்லமை மரியாள்மீது நிழலிட்டபோது அவளது கர்ப்பத்தில் இயேசு உருவானார் (லூக் 1:35). கிறிஸ்துவின் கன்னிப்பிறப்பு மனிதரால் கூடாதது. "ஆனால் கடவுளால் கூடாதது ஒன்றுமில்லை" (லூக் 1:37). மீட்கப்படமுடியாத அளவு பாவமுள்ள பாவி எவருமில்லை. மிகமிகக் கடினமானதொரு நிலைமையை மனதில் வைத்து, கிறிஸ்துவின் சீடர்கள் அவரிடம், "அப்படியானால் யார்தான் மீட்புப் பெறமுடியும்?" என்று வினவினர். அதற்கு அவர் மரியாளுக்குக் காபிரியேல் கொடுத்த பதிலையே கொடுத்தார் (மத் 19:25,26).

இரட்சிப்பு என்பது ஒரு விடுதலை. அது சாத்தானின் பிடியிலிருந்து பிடுங்கப் படுவதாம். நற்செய்தியே விடுதலைப் பிரகடனம். அது விடுதலை பெறுபவனைச் சிறையிலிருந்து சிம்மாசனத்திற்கு நடத்திச் செல்கிறது. அது பாவியானவனைப் படுபாதாளத்திலிருந்து தூக்கியெடுத்து பரத்திற்கு உயரக் கொண்டுபோய்க் கிறிஸ்துவோடு அவனை விண்ணில் அமரச் செய்கிறது. இவ்வித அறிவினால்தான் சகரியா மீட்பைக் குறித்துப் பாடுகையில், "இரட்சண்யக் கொம்பை" ஆண்டவர் உயர்த்தினார் எனப் பூரித்தார்! (லூக் 1:68,69,75).

*சுந்தரத் திருவசனம் இந்து தேசத்தும் நிலைக்கத்*
*தூயனார் எமக்கருள் சொரிந்திட;*
*தந்திரப் பிசாசின் மார்க்கம் நிந்தையுடனே பறக்கச்*
*சர்வ வல்லபன் சபை தழைக்கவே! (கீர்த்தனை)*

*— ஞா. சாமுவேல் ஐயர், தரங்கம்பாடி*